# <u>இராமநாதபுரம் நகராட்சி</u>

இராமநாதபுரம் நகராட்சியில் 2019 நவம்பர் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டம் 25.11.2019-ந் தேதி காலை 10.53 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

<u>பொருள் 1</u>

சொத்துவரியினை 01.04.2018ம் தேதி முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து சொத்துவரி சீராய்வுக்கு முந்தைய சொத்துவரியினை வசூலித்தடவும் சொத்து வரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித் துறை (செலவினம்) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை (எம்.எஸ்) எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-IV) நாள். 19.11.2019 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019ம் தேதிய ந.க.எண்.40032/2012/ஆர்1 என்ற எண்ணிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone rate) மற்றும் 2017–2018ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மறு அளவீடுகள் இந்நகராட்சி மண்டல பகுப்பாய்வின்படி (Zone rate) வரி உயர்வு செய்யப்பட்டதையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்: 3022 /2019/அ1)

<u>தீர்மானம் எண்.1041</u>– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனிஅலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராமநாதபுரம் நகராட்சி